**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 127/2020**

**Deposition of Witness for : PW 1**

**Name** : திரு. ஜெயசீலன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08-04-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது செல்லங்குப்ப கிராம கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 4.12.2017ல் நான் மேற்சொன்ன கிராமத்தில் பணியில் இருந்த போது அன்று மாலை 7 மணியளவில் என் கிராம உதவியாளர் தேவராஜ் என்பவர் போன் மூலம் செல்லங்குப்பம் கிராமம் சண்முகம் என்பவருக்கு சொந்தமான வீட்டில் ஒரு ஆண் உடல் எரிந்து கொண்டிருப்பதாக எனக்கு தகவல் தெரிவித்தார். உடனே நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது அந்த நபரின் இடுப்புக் கீழே முற்றிலும் எரிந்து விட்டது. உடனே அத்தகவலை வட்டாட்சியருக்கும், காவல் நிலையத்திற்கும் தெரியபடுத்தினேன். மறுநாள் காலை 5.12.2017ந் வேட்டவலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. நான் எரிந்த நபர் யார் என்று விசாரித்த போது அவர் சிவா (எ) யமஹா சிவா. இறந்து போன சிவாவிற்கு சண்முகம் மாமனார் ஆவார். நான் விசாரித்த போது 4ம் எதிரி குடும்பத்திற்கும் சிவாவிற்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டது என்றும், முன்விரோதம் காரணமாக எதிரிகள் கொளுத்தி இருக்கலாம் என்று புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

7 மணிக்கு எனக்கு தகவல் தெரிந்தவுடன் போலீசுக்கு தெரிவித்து விட்டேன். போலீசும் அங்கு வந்திருந்தார்கள். அன்றே 7 மணியளவில் போலீசார் என்னிடம் புகார் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் கிராமத்தில் அசாதரண சூழ்நிலையில் யாராவது இறந்து விட்டார் வட்டாட்சியருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று ஒரு அச்சு படிவம் உள்ளது என்றால் சரிதான். அந்த அச்சு படிவத்தை பூர்த்தி செய்து புகார் நகலை வட்டாட்சியருக்கு நான் அனுப்ப வேண்டும் என்று சொன்னால் சரிதான். புகாரை நான் வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் அ.சா.ஆ.1ல் வட்டாட்சியருக்கு நகல் அனுப்பியதாக குறிப்பு இல்லை என்று சொன்னால் தகவல் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

நகல் வைத்து அனுப்பியதாக குறிப்பு இல்லை. சிவா இறப்பு சம்மந்தமாக யார் யாரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. சிவா என்பவர் சென்னையில் பல திருட்டு வழக்குகள் மற்றும் அடிதடி வழக்குளில் சம்மந்தப்பட்டவர் என்ற விவரம் எனக்கு தெரியும். அவருக்கு ஊரில் நிறைய பேர் விரேதத்தில் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியிலேயே ஒரு புகார் கொடுத்து விட்டேன் என்றும், சிவாவின் மனைவி மற்றும் உறவினார்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பின்னிட்டு காலை 5 மணிக்கு எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், சிவாவின் உறவினர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/- ஜெயசீலன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.